# Salve Regina

SOCIETY OF ST. PIUS X

அக்டோபர் 2008

மலர்: 3 இதழ்: 10

(தனிச்சுற்றுக்கு மட்டும்)




# இந்தியாவின் சிறிய புஷ்பம் அர்ச். அல்போன்ஸம்மாள் !

சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் லீசியே கார்மெல் மடத்தில் வாழ்ந்தபோது மிகச் சொற்பப்பேரே அவளை அறிந்திருந்தார்கள். அவளது மரணத்திற்குப் பிறகு, சர்வேசுரன் இந்த சிறிய அர்ச்சியசிஷ்டவளை மகிமைப் படுத்தவும், அவள் கடைப்பிடித்து புனிதத்துவம் அடைந்த சிறிய வழியை உலகம் முழுவதும் அறிந்துகொள்ளவும் சித்தமானார். இன்று உலகம் முழுவதும் இப்புனிதையின் மகிமைக்காக எண்ணற்ற ஆலயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அவளுக்கென்று பீடம் அர்ப்பணிக்கப்படாத தேவாலயமே இல்லை என்று கூறும் அளவிற்கு அவளது மகிமையால் தாய் திருச்சபை மகிழ்கின்றது. அர்ச். குழந்தை தெரசம்மாளுக் கென்று உலகிலே முதன்முதலில் எழுப்பப்பட்ட தேவா லயம் நமது கோட்டாறு மேற்றிராசனத்தைச் சேர்ந்த கண்டன்விளை என்ற கிராமத்தில் இருக்கிறது என்பதை நான் அறியவருகிறேன். முன்பு, கொல்லம் மேற்றிராசனத் தோடு சேர்ந்திருந்த இந்த கண்டன்விளை பங்கில் காலஞ் சென்ற மிக. வந். அதிமேற்றிராணியார் பென்சிகர் ஆண்டகை அவர்களின் பெரும் முயற்சியால் இத்தேவா லயம் கட்டப்பட்டது. அர்ச். தெரசம்மாளின் மீது கொண்ட பக்தியினால் அவளது அர்ச்சியசிஷ்டப்பட்ட சடங்கில் கலந்துகொண்ட ஆண்டகை உலகில் முதன் முதலில் இப் புனிதையின் மகிமைக்காக எழுப்பப்படும் தேவாலயம் என் மேற்றிராசனத்தில்தான் அமையவேண்டும் என்ற ஆவலால் அதனைக் கட்டினார். அதோடு அந்த ஆலயத்தின் மணி அர்ச். குழந்தை தெரசம்மாளின் உடன் பிறந்த சகோதரிகள் அனுப்பித்தந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது!

இந்த அளவிற்கு சிறிய அர்ச்சியசிஷ்டவள் தெரசம் மாள் செல்வாக்குப் பெற்றிருக்கிறாள். ஆன்மாக்களை ஈர்த்து தமது சிறிய வழியின் பாதையில் நடப்பித்து நமதாண்டவர் சேசு கிறீஸ்துவிடம் அழைத்துச் செல்லும் ஆற்றல் அவளுக்கிருந்தது. அவள் காட்டிய சிறிய வழியில் சென்று புனிதத்துவம் அடைந்த ஆன்மாக்கள் எத்தனை! எத்தனை!! அப்படிப்பட்ட ஒரு ஆன்மாதான் கேரள மாநிலத்தைச் சார்ந்த குடமாளூர் என்ற ஊரில் பிறந்த அன்னக்குட்டி என்று அழைக்கப்பட்ட சங்கைக்குரிய சகோதரி அமலோற்பவத்தின் அல்போன்ஸா ஆவாள்.

அர்ச். குழந்தை தெரசாவாள் ஈர்க்கப்பட்டது மல்லாமல், அவளாலே அர்ப்பணக்கன்னியர் வாழ்வுக்கு அழைக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு, உத்தம அர்ச்சியசிஷ்ட நிலைக்கு உயர்ந்தவள் சகோ. அல்போன்ஸா. இவள் இன்று திருச்சபையால் அறிவிக்கப்பட்ட ஒரு அர்ச்சியசிஷ்டவள்!!

அர்ச். அல்போன்ஸம்மாளின் வாழ்வு குழந்தை சேசுவின் தெரசாளைப் போல மறைந்த, துயரங்கள் நிறைந்த வாழ்வாக இருந்ததால் அவள் **"இந்தியாவின் சிறிய புஷ்பம்"** என்று அழைக்கப்படுகிறாள். அவளைப் போல வே புனிதத்துவத்தின் கொடுமுடியை அடைந்தவள் அர்ச். அல்போன்ஸா. அவளது அடக்கப்பூசையின் பிரசங்கத்தில், அவளது ஆன்ம குரு சங். ரோமுலுஸ் C.M.I. சுவாமி: "...என் உள்ளத்தில் நான் கொண்டிருக்கும் உறுதியான நம்பிக் கையுடனும், இக்கன்னியாஸ்திரியை நன்றாக அறிந்து



அர்ச். அல்போன்ஸம்மாவின் கல்லறை

கொண்டவன் என்ற முறையிலும், நாம் இப்போது ஒரு பரிசுத்த பெண்மணியின் இறுதி சடங்குகளில் பங்கு பெறுகிறோம் என்று என்னால் உறுதியாய் சொல்ல முடியும். இவளின் மெய்யான மதிப்பை இவ்வுலகம் இப்பொழுது அறிந்திருக்குமானால், கணக்கற்ற குருக்களும், மேற்றிராணி மார்களும், விசுவாசிகளும் இந்தியாவின் எத்திசையிலிருந் தும் வந்திருப்பார்கள். இப்பரிசுத்த சரீரத்தை கடைசியாக ஒருமுறையேனும் தரிசிக்கவும், இவளின் நினைவாக சிறு அருளிக்கங்களை எடுக்கவும் போட்டிப்போட்டுக்கொண்டு வந்திருப்பார்கள். மனித புத்தியினால் எடுக்கப்படும் தீர்மா னத்தை எந்த அளவிற்கு நம்பமுடியுமோ, அவ்வளவு உறுதி யுடன், இந்த இளம் கன்னிகை லிஸியே நகர் குழந்தை தெரசம்மாளைவிட அர்ச்சியசிஷ்டதனத்தில் குறைந்தவள் அல்ல என்று நான் உறுதியாய் கூறுகிறேன்" என்று குறிப்பிடு கிறார். என்ன ஒரு தீர்க்கதரிசனமான உரை!! எளிய, மறைந்த வாழ்வை வாழ்ந்த இச்சகோதரி (12.10.2008) ஞாயிறன்று உரோமையில் பரிசுத்த பாப்பானவரால் அகில திருச்சபை முழுவதும் விசுவாசிகளால் கண்டு பாவிக்கத் தகுந்தவள் என்று அறிவிக்கப்பட்டு பீட வணக்கத்திற்கு உயர்த்தப்பட்டாள்!!

அர்ச். அல்போன்ஸா **"பாடுகளின் மலர்"** என்றும் அழைக்கப்படுகிறாள். காட்சியாகமத்தில் குறிப்பிடப்பட்ட "செம்மறிப்புருவையானவர் போகும் இடங்கள்தோறும் அவரைப் பின்செல்லுகிற" (காட்சி. 14:4) கன்னியர்களைப் போல, அர்ச். அல்போன்ஸாவும் பின்சென்றாள். செம்மறிப் புருவையானவரோடு பலியானாள். தன்னையே தகனப் பலிப்பொருளாக ஒப்புக்கொடுத்தாள். அவரோடு அவரில் மறைவில் அமைதியாக துன்புறுவதையே விரும்பினாள். அவற்றை - துன்பத்தைக் கேட்டுப் பெற்றாள். தான் எழுதிய ஒரு கடிதத்தில்: "துன்பங்களும் பாடுகளுமே தனது மண வாளனின் பாகமாக இருந்தபடியால், நானும் அவைகளை அரவணைத்து ஏற்றுக்கொள்கிறேன். எனது சரீரம் தொடர்ந்து வாதைகள்பட்டாலும் என் ஆத்துமம் சமாதான மாய் இருக்கிறது. கடந்த ஏழு ஆண்டுகளாக நான் எனக்கு சொந்தமல்ல; என்னை முழுவதும் என் தெய்வீகமணாள

னிடம் ஒப்படைத்துவிட்டேன். இது உனக்குத் தெரிந்ததே; இப்பொழுது ஆண்டவர் என்னை என்னச் செய்ய விரும்பு கிறாரோ அதன்படியே என்னை நடத்தட்டும். நான் சரீர குணத்தை விரும்பித் தேடவில்லை. மாறாக, அவரது சித்தம் என்னில் நிறைவேறுவதையே விரும்புகிறேன்...'' என்று பாடுகளின்மீதான தமது ஆவலைக் குறிப்பிட்டுள்ளாள். தன்னையே வெறுமையாக்கி அதில் கிறீஸ்துவையும் அவரது பாடுகளையும் ஏற்றுக்கொண்டவள் நமது புதிய அர்ச்சிய சிஷ்டவள்! " கிறீஸ்துநாதர் எனக்கு ஜீவன்...Mihi vivere Christus est'' என்ற அர்ச். சின்னப்பரின் வாக்கு அவளில் நிறைவேறியது என்றால் மிகையாகாது.

அதோடு மட்டுமல்லாமல் அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாளைப் போலவே ஆன்மாக்களைக் குறிப்பாக, தேவ ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட குருக்கள், துறவி யருக்காக, அவர்களது பாவங்களால் மூட்டப்படும் தேவ நீதிக்கு தன்னையே அன்பின் தகனப் பலிப்பொருளாக (caritatis Victima) ஒப்புக்கொடுத்து பலியாகும் ஆன்மா வாகத் திகழ்ந்தாள். ஒருநாள் மடத்து தாயார் துன்புறும் அல்போன்ஸம்மாவைப் பார்த்து, "இந்த வியாதி நீங்கும்படி நீ வேண்டிக்கொள்ளக் கூடாதா?'' என்று கேட்டார். அதற்கு அல்போன்ஸம்மாள், "வேண்டாம், இதற்கு மேலும் நான் சகிக்கத் தயார். இன்றைய உலகம் சுக சந்தோஷங்களில் மூழ்கி அழிவை நோக்கிச் செல்கின்றது. உலகத்துக்காகவும், ஞான வாழ்வில் குளிர்ந்து அசமந்தமாகி, இலௌகீக எண்ணங்களுக்கு அடிமையாக்கப்பட்டுள்ள குருக்கள், துறவிகளின் பிரமாணிக்கமின்மைக்கு பரிகாரமாக ஒரு பலிப்பொருளாக ஆண்டவர் என்னை வெட்டவோ குத்திக் காயப்படுத்தவோ எதுவும் செய்யட்டும்...'' என்று பதில் சொன்னாள். (காண்க 'அன்பின் தகனப்பலி' சங். பி.கே. ஜார்ஜ் சே.ச. பக்கம் 39). இப்படியாக உலகத்தின் மீதும், ஆன்மாக்களின் மீதும் அக்கறைக்கொண்ட அன்பு சகோதரி யைத்தான் திருச்சபை இன்று புனிதையாக அறிவித்து அவளது மன்றாட்டில் நம்மை வைக்கும்படியாகக் கேட்கிறது.

புதிய அர்ச்சியசிஷ்டவளின் இந்த மகிமை, நமது இந்திய தேசத்தில் மீட்பின் வரப்பிரசாதங்களை அபரிமித மாகப் பொழிந்து அஞ்ஞான இருள் நீக்கும் என்று திடமாக நம்புகிறோம். கத்தோலிக்க மக்களாகிய நமக்கு, நமது விசுவாச ஞானவாழ்வில் ஊக்கத்தையும், திடத்தையும் தரும் என்பதில் ஐயமில்லை. அர்ச்சியசிஷ்டப்பட்டம் வழங்கப் பட்ட நாளில் திரிகால ஜெபத்தின்போது பரிசுத்த பாப்பான வர் 16-ம் ஆசீர்வாதப்பர், "அர்ச். அல்போன்ஸாவின் வீர




அர்ச். அல்போன்ஸா கல்லறைச் சிற்றாலயத்தில் நிறைவேற்றப்பட்ட திரிதெந்தீன் திவ்விய பலிபூசை

வைராக்கியமான புண்ணியங்களான பொறுமை, விமரிசை மற்றும் நிலைநிறுத்தல் ஆகியவை, நமது ஒவ்வொரு சோதனைகளையும் மேற்கொள்ளத் தேவையான வலிமை யை சர்வேசுரன் எப்பொழுதும் தருவார் என்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றன'' என்று கூறினார்.

புனித அல்போன்ஸம்மாளுக்கு அர்ச்சியசிஷ்டப் பட்டம் வழங்கப்பட்ட இந்த மகிழ்ச்சியான பொழுதில், **'சால்வே ரெஜினா'** தனது 3-வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறது. நமது மோட்ச பாது காவலர்களோடு நமது 'சால்வே ரெஜினா' பத்திரிகையை அர்ச். அல்போன்ஸம்மாளின் பாதுகாவலில் வைப்போமாக. இந்தியாவின் முதல் பெண் அர்ச்சிஷ்டவளான அல்போன் ஸம்மாவை எங்கள் பத்திரிக்கை சங்கைசெய்து மகிமைப் படுத்துகிறது. அவளது மகிமையில் அகமகிழ்ந்து சர்வேசுர னுக்கு நன்றி செலுத்துகிறது.

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**







# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

## - அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

### (8) புதிய வடிவத்தில் தேவதிரவிய அநுமானங்கள்! (தொடர்ச்சி)

### அவஸ்தைபூசுதல் — பச்சாத்தாபம்

*நோயுற்று மரண ஆபத்திலிருக்கும் ஆத்துமங்களுக்கு மட்டுமே கொடுக்கப்படக்கூடிய இத்தேவதிரவிய அநுமானம் இப்பொழுது வயது முதிர்ந்த அனைவருக்கும் கொடுக்கக்கூடிய ஒன்றாக மாற்றப்பட்டுவிட்டது. சில குருக்கள் வெறும் ஓய்வுபெறும் வயதை எட்டியவர்களுக்குக்கூட இதனைக் கொடுக்கிறார்கள். இனி இந்த தேவதிரவிய அநுமானம், ஆத்துமத்தை அதனுடைய கடைசித் தருணத்திற்குத் தயார் செய்யும் தேவதிரவிய அநுமானமாக, மரணத்திற்கு முன் ஆத்துமத்தில் உள்ள பாவக்கறைகளை கழுவி சர்வேசுரனுடைய கடைசி ஐக்கியத்திற்குத் தயார் செய்யும் தேவதிரவிய அநுமானமாகக் கருதப்படுவதில்லை!*



**பாப்பானவர் 12-ம் பத்திநாதருடன்**
**வந். லெஃபவர் ஆண்டகை**

*பாரீஸ் நகர தேவாலயம் ஒன்றில், அடுத்த அவஸ்தை பூசுதல் கொடுக்கப்படும் தேதியை ஞாபகமூட்டுவதற்கு வெளியிடப்பட்ட துண்டுபிரசுரம் ஒன்று என் கைவசம் இருக்கிறது. அதில்: "தங்களது காரியங்களை தாங்களே கவனித்துக்கொள்ளும் முதியவர்களுக்கு, ஞாயிறு 11 மணிக்கு நடைபெறும் நற்கருணைக் கொண்டாட்டத்தின் போது கிறீஸ்தவ சமூகத்திற்கு முன்பாக நோயில்பூசுதல் கொடுக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது! இத்தகைய பூசுதல் சடங்கு செல்லத் தக்கதல்ல.*

*இதுபோன்ற கூட்டுக் கொண்டாட்ட மனப்பாங்கு பச்சாத்தாபம் என்ற பாவசங்கீர்த்தன நிறைவேற்றத்தையும் சிறுமைப்படுத்துகிறது. பச்சாதாபம் என்ற தேவதிரவிய அநுமானம் தன்னிலேயே ஒரு தனிப்பட்ட தன்மையைக் கொண்டிருக்கிறது. இது அதனுடைய இலக்கணத்திற்கேற்பவும், தன்மைக்கேற்பவும் நீதி தீர்ப்பிடும் அதிகாரம் பொருந்திய செயலாக இருக்கிறது. நீதி தீர்ப்பானது வழக்கு விசாரணை செய்யப்படாமல் தரப்படுவதில்லை. ஒவ்வொருவருடைய விவகாரமும் விசாரிக்கப்பட்ட பின்புதான் பாவங்கள் மன்னிக்கப்படுதலோ அல்லது மன்னியாமல் விடப்படு வதோ நடக்கும். பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பரும் இதை பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறார். குறிப்பாக 1982-ல் ஏப்ரலில் பிரான்ஸ் நாட்டு மேற்றிராணியார்களுக்கு வேதசத்திய ஒழுங்கு முறையின்படி "தனிப் பாவசங்கீர்த்தனமும் தனி பாவமன்னிப்பும் தேவை" என்று கூறியிருக்கிறார்.*

*ஆகவே இப்படிப்பட்ட பொது "ஒப்புரவு" அருட்சாதன கொண்டாட்டங்களை எளிமைப்படுத்தப்பட்டுள்ளவை என்றோ அல்லது நவீன உலகிற்கேற்ப மாற்றம் செய்யப்பட்டவை என்று சொல்லியோ நியாயம் கற்பிப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத வாதம்! இது வெறும் தேவாராதனை முறையின் ஒழுங்கு பற்றிய காரியம் அல்ல. முன்பு, பொது பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுப்பதற்கு ஒரே ஒரு முகாந்தரம் மட்டுமே இருந்தது. அதாவது கப்பல் மூழ்கும்போது, போர்காலத்தின் போது போன்ற சூழ்நிலையில் அது கொடுக்கப்படலாம். இதுவும்கூட, வேதசாஸ்திரிகளின் கடுமையான விவாதத்திற்கு உட்பட்டிருக்கிறது. ஆனாலும் இது ஓர் விதிவிலக்காகத்தான் இருக்கிறது. விதிவிலக்கை சட்டமாக மாற்றக்கூடாது. அப்போஸ்தலிக்க பீடத்தின் செயல்பாடுகள் (Acta Apostolica Sedis) என்ற ஆவணப்புத்தகத்தை புரட்டினால் பாப்பானவர் 6-ம் சின்னப்பர், 2-ம் அருள் சின்னப்பர் போன்றோர் வெவ்வேறு நேரங்களில் உரைத்த "...பொது பாவபொறுத்தலின் விதிவிலக்கு", "...கனமான காரணங்களை முன்னிட்ட அசாதாரணமான சூழ்நிலை என்பது போன்ற வாக்கியங்களைக் காணலாம்.*

இப்படிப்பட்ட "பொது ஒப்புரவு" சடங்கு அடிக்கடி நிகழாவிட்டாலும்கூட இப்போது அது ஒரு சாதாரண காரியமாகிப் போய்விட்டது. இதற்குக் காரணம் விசுவாசிகளின் அலட்சியப்போக்கே. அதாவது, வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறைக்கு அதிகமாக பாவசங்கீர்த்தனத்தின் மூலமாக சர்வேசுரனுடனான தங்களது உறவை சீர்படுத்திக்கொள்ள விரும்பும் விசுவாசிகளின் எண்ணிக்கை குறைந்து போய் விட்டதே இதற்குக் காரணம். இத்தகையோர் இந்தத் தேவதிரவிய அநுமானத்தின் தேவையை உணர்வதில்லை; காரணம் என்னவெனில், அவர்களது உள்ளங்களிலிருந்து பாவத்தைப்பற்றிய சிந்தனை முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டதேயாகும்! இன்று எத்தனை குருக்கள் பாவசங்கீர்த் தனத்தின் தேவையைப்பற்றி மக்களுக்குக் கூறுகிறார்கள்? ஒரு விசுவாசி என்னிடம் கூறுகையில், பாரீஸ் நகர தேவாலயங்கள் பலவற்றில் பாவசங்கீர்த்தனம் செய்ய குருக்களைத் தேடிச் செல்கையில் "கடமையில் இருக்கும்" (பாவசங்கீர்த் தனம் கேட்கும்) குருக்கள் தம்மை வியப்போடு பாராட்டியதாகவும், நன்றி தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்! அந்த அளவிற்கு பாவசங்கீர்த்தனம் செய்வது அரிதாகிவிட்டது.

"ஒப்புரவு அருட்சாதன" கொண்டாட்டங்கள், முதலில் வழிபாட்டைத் தயார்செய்வோரின் கற்பனா சக்திக்கு ஏற்ப ஒலிநாடா மூலமாகவோ அல்லது பாடற் குழுவினர் மூலமாகவோ பாடல்கள் இணைக்கப்பட்டவையாகிவிட்டன. பிறகு, "வார்த்தை வழிபாடு" நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து பிரார்த்தனை போன்ற ஜெபம் சொல்லப்பட்டு, அதற்கு ஆலயத்தில் கூடியிருப்போர் "பாவி என்மேல் இரக்கமாயிரும்" என்று பதில் கூறப்படுகின்றன. சில சமயங்களில் ஒருவகையான பொது ஆத்துமசோதனை செய்யப்பட்டு பின்பு "எல்லாம் வல்ல சர்வேசுரனிடமும், சகோதரரே உம்மிடமும்..." என்ற பாவசங்கீர்த்தன மந்திரம் சொல்லப்பட அதைத் தொடர்ந்து கூடியிருக்கும் விசுவாசிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக, திருச்சபையை விட்டு விலகிப்போயிருக்கும் அல்லது வேத காரியங்களை முற்றிலுமாக கைவிட்டிருக்கும் விசுவாசிகளை திரும்பவும் திருச்சபைக்கு - வேத கடமைக்கு அழைத்து வருவதற்காக ஓர் இயக்கத்தை இரண்டு ஆயர்கள் துவக்கினார்கள். இதற்கு இங்கிலாந்தின் பிரபல கத்தோலிக்க பத்திரிக்கையான "The Universe" தனது ஆதரவையும் தெரிவித்திருந்தது. அதில் இந்த இரண்டு ஆயர்களும் வெளியிட்ட அழைப்பு - வீட்டை விட்டு ஓடிப்போன விடலைப் பருவத்தினரை திரும்ப அழைக்கும் குடும்பத்தினரைப் போன்று: "...சிறிய..., தயவு செய்து வீடு திரும்புவாயாக. யாரும் உன்னை எதுவும் சொல்லமாட்டார்கள்", - "உங்கள் ஆயர் உங்களை இந்தத் தவக் காலத்தில் சந்தோஷப்படுவதற்கும், கொண்டாடுவதற்கும் அழைக்கின்றார். திருச்சபை கிறீஸ்துவைப் பின்பற்றி தன்னுடைய பிள்ளைகளுக்கு, அவர்களுடைய பாவங்களை இலவசமாகவும் நிபந்தனையின்றியும், ஆத்துமங்களின் எந்த தகுதியையும் கருதாமலும், அதை அவர்கள் கேட்காத போதிலும், பாவமன்னிப்பை வழங்குகிறது. இந்த அழைப்பையேற்று திரும்பவும் வீட்டிற்கு வருமாறு வேண்டுகிறது..."! இதனால் அநேகர் பல வருடப் பிரிவிற்குப் பிறகு திருச்சபைக்குத் திரும்ப வருகிறார்கள். ஆனால் பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு மனமில்லாது இருக்கிறார்கள் அல்லது உடனடியாக அதைச் செய்யத் தயங்குகிறார்கள்." இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்கள் பின்வரும் வாய்ப்பை ஏற்றுக்கொள்ளக்கூடும்: உங்கள் மறைமாவட்டத்தில் ஆயரால் நிறைவேற்றப்படும் விசேஷ பூசையின்போது, அங்கு வருகை தரும் அனைவரும் தங்கள் கடந்த கால பாவங்களுக்கு பாவப்பொறுத்தல் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறார்கள். அவ்வேளையில் உடனடியாக பாவசங்கீர்த் தனம் தேவையில்லை. தங்கள் பாவங்களுக்காக மனந் திரும்பி கடவுளிடம் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்தாலே போதும். திருச்சபையில் உட்பட்டப் பிற்பாடு பின்னர் வேறு சமயம் பாவசங்கீர்த்தனம் செய்தாலே போதும். இதற்கிடையில் இவர்கள் தங்கள் வானகப் பிதாவின் கரங்களால் அரவணைக்க அனுமதித்தாலே போதும். இந்த தாராள மனந்திரும்புதலைப் பொறுத்து மேற்றிராணியார் அங்கு விரும்பி கூடியிருப்பவர்களுக்கு பாவப்பொறுத்தல் அளிப்பார். அவர்கள் அந்நேரமே திவ்விய நற்கருணை உட்கொள்ளலாம்...". இப்படிப் போகிறது அறிவிப்பு!!

லூர்து நகரிலிருந்து வெளிவரும் 'Grotto' என்ற இருமாத இதழ்: "பொதுப் பாவப்பொறுத்தல்: உடனே நற்கருணை - பிறகு பாவசங்கீர்த்தனம்" என்ற தலைப்பில் ஒரு விநோதமான மேய்ப்பு பணி மடலை வெளியிட்டது. இந்த மேய்ப்பு பணியைப்பற்றி அப்பத்திரிகை பின்வரும் கருத்தையும் வெளியிட்டது. "...இம்மடலை வாசிக்கும் நம் வாசகர்கள், நற்செய்தியின் உணர்வு இதில் எவ்வளவு ஆழமாக இருக்கிறது என்பதையும், மக்களின் இன்றைய நிலையை எவ்வளவு தெளிவாக இது அறிந்துள்ளது என்பதையும் அறிய வருவார்கள்"!!!

இதனால் எந்த விளைவுகள் கிடைக்கும் என்பதை நானறியேன். ஆனால் காரியம் அதுவல்ல. மேய்ப்பு பணிக்கான தேவை எப்படி வேதசத்தியத்தை இரண்டாம் பட்சமாக்க முடியும்? அதுவும் தேவநற்கருணையை அனைவரும் உட்கொள்ளலாம், பல வருடங்களாக ஆலயத்தின் பக்கம்கூட செல்லாதவரும், சாவான பாவத்தோடு உள்ளவர்களும் அதை உட்கொள்ளலாம் என்ற நிலைக்கு எப்படிப் போக முடியும்? ஒருக்காலும் முடியாது! இப்படிப்பட்ட "மனந்திரும்புதலை" அவசங்கை என்ற விலை கொடுத்து எப்படி வாங்கத் துணிந்தார்கள்? இப்படி மனந்திரும்பியவர்கள் எவ்வளவு காலம் தாக்குப்பிடித்து நிற்பார்கள்? அனுபவத்திலிருந்து நாம் அறிவது: இங்கிலாந்து நாட்டில் 2-ம் வத். சங்கத்திற்கு முன்பு அதாவது இந்த புதிய முறை மேய்ப்புபணிக்கு முன்பு மனந்திரும்பியவர்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு 14 முதல் 15 ஆயிரம் வரையில் இருந்தது. அவை இப்போது 5000க்கும் கீழாகக் குறைந்து விட்டது! இந்தக் கனிகளைக் கொண்டு மரத்தை அறிந்துகொள்ளலாம்.

(தொடரும்)

**உங்களில் ஒருவன் வியாதியாயிருக்கிறானோ, அவன் சபையின் குருக்களை வரவழைப்பானாக. அவர்கள் ஆண்டவருடைய நாமத்தினாலே அவனைத் தைலத்தால் பூசி அவனுக்காக ஜெபம் பண்ணுவார்கள்.** (இயாக. 5:14)

# தேவ ஆராதனை முறைமை

## உரோமைய பூசைப் புத்தகம்

திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளில் எங்கும் பாடற் பூசையே நடந்தேறி வந்தமையால் பூசையில் உபயோகிக்க அநேக புத்தகங்கள் வழக்கில் இருந்து வந்தன. 'தேவதிரவிய அநுமான பொக்கிஷங்களில்' (Sacramentaria) குரு வாசிக்க வேண்டிய பாகங்களும், 'சுவிசேஷத் தொகுதிப் புத்தகங்களில்' (Evangeliaria) தியாக்கோனுடைய பாகங்களும், 'நிருபப் புத்தகங்களில்' (Epistolaria) உதவி தியாக்கோனுக்குரிய பகுதிகளும், 'திருவாசகப் புத்தகங்களில்' (Lectionaria) வாசகர்களின் பகுதிகளும் அடங்கியிருந்தன. பாடகர்களின் உபயோகத்திற்கென 'ஆரம்ப வாக்கிய புத்தகங்களும்' (Antiphonaria), 'படிக்கீதத்தொகுதிகளும்' (Gradualia) இருந்தன. பத்தாவது நூற்றாண்டிலிருந்து ஒவ்வொரு குருவும் சாதாரண பூசையும் செய்யும் வழக்கம் ஏற்பட்டதால் அத்தனைப் புத்தகங்களின் அவசியம் இல்லாமற்போகவே, பூசைக்கு வேண்டிய பகுதிகளெல்லாம் அடங்கியுள்ள 'பூசைப் புத்தகம்' (Missale) ஏற்பட்டது.

இப்புத்தகம் திவ்விய பலிப்பூசைக்கு ஏற்படுத்தப் பட்டதாலும், அதனுள் ஆண்டவருடைய வாக்கியங்களும், இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப்பட்டு எழுதிய வசனங்களும், திருச்சபையின் சொந்த ஜெபங்களும் அடங்கியிருப்பதாலும் இப்புத்தகத்தை விசுவாசிகள் வணக்கத்துடன் போற்றல் வேண்டும்.

-------------

### பூசைப் புத்தகத்தின் பிரிவுகள்

இப்புத்தகம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

***(1) அனுதின பூசைப்பாகம்*** (Ordinarium Missae): மாற்றமின்றி ஒவ்வொரு பூசையிலும் சொல்லவேண்டிய செபங்கள்.

***(2) காலவேற்றுமைக்குரிய பாகம்*** (Proprium Temporis): வருஷத்தில் வரும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளுக்கும், விசேஷ நாட்களுக்கும் உரியது. எனவே ஆகமன காலம், கர்த்தர் பிறந்த திருநாட்காலம், மூன்று இராஜாக்கள் திருநாட்காலம், தபசுகாலம், பாஸ்கு திருநாட்காலம், இஸ்பிரீத்துசாந்துவின் காலம் என்ற பிரிவுகள் உண்டு. இவைகளுக்குரிய பிரவேச வாக்கியம், சபைச் செபம், நிருப வாக்கியம், படிக்கீதம் முதலிய சங்கீதப் பாடல்கள், சுவிசேஷ வாக்கியம், ஒப்புக்கொடுத்தல் வாக்கியம், அமைதி மன்றாட்டு, உட்கொள்ளுதல் வாக்கியம், உட்கொண்டபின் செபம் இவைகளடங்கியது.

***(3) அர்ச்சியசிஷ்டவர்களுக்குரிய பாகம்*** (Proprium Sanctorum): திருச்சபை கொண்டாடும் அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்துப் பிரத்தியேகமாய்ச் செய்யப்படும் பூசைச் செபங்கள் தேவ ஆராதனை முறையின் காலம் துவக்கும் நவம்பர் மாதம் 29-ம் தேதியிலிருந்து ஒவ்வொரு நாளும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

***(4) அர்ச்சியசிஷ்டவர்களுக்குரிய பொதுவான பாகம்*** (Commune Sanctorum): அர்ச்சியசிஷ்டவர்களில் அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர், வேதசாட்சிகள், பாப்புமார்கள், மேற்றிராணிமார்கள், ஸ்துதியர்கள், வேதபாரகர், முனிவர்கள், கன்னியர், கன்னியரும் வேதசாட்சிகளுமானவர், விதவைகள் என்று பல வகுப்புகளுண்டு. இவர்களில் ஒவ்வொரு வகுப்பாருக்கும் பொதுவான பூசைகள் இப்பாகத்தில் இருக்கும். இறுதியில் "தேவாலய அபிஷேக பூசையும்" உண்டு.

இப்பூசைப் புத்தகத்தில் ஆரம்பத்தில் பூசை செய்ய வேண்டிய ஒழுங்குகளும் திருச்சபையின் பஞ்சாங்கமும் கொடுக்கப்பட்டுள்ளன.

அர்ச்சியசிஷ்டவர்களுக்குரிய பொதுவான பாகத்திற்குப்பின் **வேண்டுதல் பூசைகள் உண்டு**. அதாவது குரு அல்லது விசுவாசிகள் தங்களுடைய விசேஷ கருத்துக்காக செய்யத்தகும் பூசைகள். (1) நமது திவ்விய இரட்சகரைக் குறித்து. (2) தேவாலயத்தைக் குறித்து. (3) பல்வேறு அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்து. (4) பற்பல அவசரங்களுக்கு ஏற்றவை.

இதன்பின் மரித்தோர் பூசைகள்: (1) உத்தரிக்கிற ஸ்தலத்து சகல ஆத்துமங்களுக்காக நவம்பர் மாதம் 2-ம் தேதி செய்யப்படும் மூன்று பூசைகள். (2) மரித்த அல்லது அடக்கஞ் செய்யும் நாளுக்குரிய பூசை. (3) மரித்த ஏழாம் நாள், முப்பதாம் நாள் பூசைகள். (4) மரித்த வருஷாந்தர நாட் பூசை. (5) மரித்தோருக்காகச் சாதாரண நாட்களில் செய்யப்படும் பூசை. (6) மரித்தோருக்காகச் செய்யக்கூடிய பலவகைப்பட்ட செபங்கள்.

சிற்சில இடங்களுக்கு மாத்திரம் உரிய பூசைகளும், சில சபையாருக்கு அல்லது தேசத்தாருக்கு மாத்திரம் உரிய பூசைகளும், கடைசியில் இருக்கின்றன.

பூசைப் புத்தகத்தைத் தவிர மற்றப் புத்தகங்களும் உண்டு.

***1. மந்திரமாலைப் புத்தகம்*** (Breviarium): குருக்களும் சந்நியாசச் சபைகளைச் சேர்ந்தவர்களும் திருச்சபையின் பெயரால் தினந்தோறும்சொல்லுஞ் செபங்களும், கீதங்களும், வாசகங்களும் அடங்கியுள்ளது.

***2. சடங்குப் புத்தகம்*** (Rituale): ஏழு தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுதல், ஆசீர்வாதங்கள், சுற்றுப் பிரகாரம், மரித்தோரை அடக்கஞ்செய்தல் இவைகளுக்கேற்ற செபங்களும் ஒழுங்குகளும் இதில் உண்டு.

***3. மேற்றிராணியார் புத்தகம்*** (Pontificale): மேற்றிராணிமார்கள் மட்டும் நிறைவேற்றக்கூடிய அபிஷேகங்கள், உறுதிப்பூசுதல், குருத்துவம் என்ற தேவதிரவிய அநுமானங்களின் சடங்குகள் முதலியன இதில் உண்டு.

***4. ரீதிப் புத்தகம்*** (Caeremoniale): மேற்றிராசனக் கோவில்களில் நடக்கும் பெரிய சடங்குகளுக்கான புத்தகம்.

***5. வேதசாட்சிகளின் நடபடி*** (Martyrologium): மிகப் புராதன புத்தகம். வேதசாட்சிகளுடையவும் அர்ச்சியசிஷ்டவர்களுடையவும் சுருக்கமான வரலாற்றைக் கூறும் நூல்.

(தொடரும்)

# அர்ச். ஜெபமாலை மாதா

( திரு. S.P. டீக்குருஸ், பாளையங்கோட்டை)

இலத்தீன் மொழியிலும், மற்ற ஐரோப்பிய மொழியிலும் ஜெபமாலையானது "ரோஜாப் பூ" மாலை (ROSARIUM) என்று அழைக்கப்படுகிறது. ரோஜாப் பூ மற்ற மலர்களிலும் அழகுள்ளதாகவும், மனதைக் கவரும் மணமுள்ளதாகவும் இருக்கிறதோ, அப்படியே பக்திக்குரிய ஞான ரோஜாப் பூமாலையாக விளங்கும் பரிசுத்த ஜெபமாலை, ஜெபங்களுள் சொல்வதற்கு எளிதாகவும், கேட்பதற்கு இனிமையாகவும் இலங்குகின்றது. ரோஜா மலர் அழகையும், நிறத்தையும், மணத்தையும் கொடுத்த போதிலும் உபயோகத்திற்கு கனியைக் கொடுக்காது. ஆனால் ஜெபமாலை ஜெபிப்பதோ நம்பிக்கையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் தருகின்றது.

சத்தியத் திருச்சபையின் தலைமூத்த குமாரத்தி என்று சிறப்புடன் அழைக்கப்படும் பிரான்ஸ் நாட்டின் தென்பகுதியில் 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் '**ஆல்பிஜென்சியம்**' என்ற தப்பறை வேரூன்றி சத்திய வேத போதகங்களை நிர்மூலமாக்கி வந்தது. அதனைப் பின் பற்றிய ஆல்பிஜென்சியர்கள் நாடெங்கும் சென்று தங்கள் தப்பறைகளைப் பரப்பி வந்தனர். அப்போது கத்தோலிக்க வேதசத்தியங்களைப் போதிக்கும் அப்போஸ்தலராக சர்வேசுரன் அர்ச். சாமிநாதரை எழுப்பினார். அவரும் ஆன்ம தாகத்தோடு போதித்தார். ஆனாலும் வேத விரோதிகள் மனந்திரும்புவதற்காக நிகழ்த்திய பிரசங்கங்கள், செய்த முயற்சிகள் யாவும் பலனளிக்காது போனது. ஆனாலும் அர்ச். சாமிநாதர் தமது நம்பிக்கையையும், முயற்சியையும் இழக்கவில்லை. தேவதாயிடம் தமக்கு உதவும்படி அல்லும்பகலும் இடைவிடாது மன்றாடிவந்தார். கடின தவமுயற்சிகளை மேற்கொண்டார்.

ஒருநாள் அவர், தம்மால் பதிதர்களை மனந்திருப்ப முடியவில்லையே என்று மனம் வருந்தி, தேவ அன்னையின் பீடத்திற்கு முன்பாக தாழ்ச்சியுடன் முறையிட்டு வேண்டிக் கொண்டிருந்தார். அப்போது தேவதாய் காட்சி கொடுத்து, அவரை நோக்கி: "தோமினிக், நீ ஒரு செழிப்பற்ற நிலத்தில பயிர்செய்கின்றாய், மழை அதன்மேல் விழாதிருக்குந்தனையும் அது வரண்ட நிலமாகத்தான் இருக்கும்"என்று கூறி, தேவ வரப்பிரசாதமே தாம் குறிப்பிட்ட மழையென்றும், அதனை ஆன்மாக்களின் மீது பொழியச்செய்ய ஜெபமாலை பக்தியே சிறந்த வழியென்றும் கற்பித்தார்கள்.

தேவதாயின் தரிசனையால் சொல்லிலடங்காத மகிழ்ச்சியடைந்த சாமிநாதர், தேவதாய் கேட்டுக் கொண்டபடியே ஜெபமாலை பக்திமுயற்சியைப் பரப்பினார். உடனே அவருடைய முயற்சிகளும், பணிகளும் சொல்லிலடங்காத பெரும் நன்மைகளை அளித்தன. வெகு சீக்கிரத்தில் தேவ வரப்பிரசாதம் மாரிபோல் ஆத்துமங்களின் மீது பொழியலானது! அதனால் ஆயிரக்கணக்கான பதிதர்கள் சத்திய திருச்சபையில் உட்பட்டனர். வெகு கூரான ஆயுதம் போன்ற வைரமணிமாலையான ஜெபமாலை தப்பறையான கொள்கைகளின்மேல் வெற்றிக்கொண்டது.

இப்பரிசுத்த வைரக்கற்களாலான மாலையின் வல்லமை எல்லோருக்கும் நன்கு விளங்கும். அதுவே இப்பொழுதும், எப்பொழுதும் எல்லாக் காலங்களிலும், வருத்தங்கள் துன்பங்களிலும் கிறீஸ்தவர்களின் விசேஷ உதவியும், மன அமைதியுமாக இருக்கிறது. ஜெபமாலையின் வல்லமையை முன்குறிப்பாக பரிசுத்த வேதாகமத்தில் எழுதியிருப்பதாவது, "விலங்குகளையும் சங்கிலிகளையும் செய்து உன் கழுத்தில் மாட்டிக்கொள்" (எரேமி. 27:2). "அப்போது உன் விலங்குகள், உன் பலத்தின் காவலும் உன் வீரத்தின் அஸ்திவாரமாயும் இருக்கும். ஏனெனில் சீவியத்தின் அலங்காரம் அதில் உண்டு. அதன் விலங்குகள் குணப்படுத்தும் கட்டுகளாம்" (சர்வப்பிர. 6:30,31).

புனித ஜெபமாலையின் மேன்மை - மகத்துவம் அதில் சொல்லப்படும் ஜெபங்களில் காணக்கிடக்கிறது. நாம் இந்த புகழ்மாலையை தொடுக்கும்போதும் - ஜெபிக்கும்போதும் நமது இரட்சகராகிய சேசுக் கிறீஸ்துவினுடையவும் அவருடைய மாதாவினுடையவும் சீவியங்களைச் சிந்தித்து, அவர்கள் இருவரையும் வாழ்த்தி வணங்கி வேண்டுகிறோம். நமது துன்ப துயரங்களில் நமக்குத் துணையாயிருக்க மன்றாடுகின்றோம். எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் மகிமை பொருந்திய என்றும் வாடாத மாலையை தொடுத்து அர்ச். கன்னிமாமரியின் திருப்பாதங்களில் வைக்கின்றோம்.

இத்திருமாலை மங்கிப்போகும் முத்து இரத்தினங்களால் தொடுக்கப்பட்டதல்ல. காலையில் மலர்ந்து மாலையில் வாடி வதங்கிப்போகும் மாலையும் அல்ல. மெல்லிய வாழைநாரினால் கட்டப்பட்டதும் அல்ல. ஆனால் ஜெபமாலையே வாடாமல் மங்காமல் நம் வாழ்நாள் முழுவதும், ஏன் நித்தியத்திற்கும் நமக்குப் பயன் பெற்றுத்தரும் விலைமதிக்கப்படாத பூங்கொத்து! பக்தியின் ஜெபக்கொத்து. மாசு அணுகா மாதாவின் புகழ்மாலை!!

ஆதலால் வல்லமையும் மேன்மையும் பொருந்திய ஜெபமாலை ஜெபத்தை நாம் தவறாது நாள்தோறும் மறவாமல் பக்தியுடனும், தாழ்மையுடனும் ஜெபித்து வரவேண்டும். முக்கியமாக அர்ச். ஜெபமாலை மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இந்த அக்டோபர் மாதத்தில் மகிமைமிக்க ஜெபமாலை ஜெபத்தை பக்தியோடு ஜெபித்து நமது பரலோக அன்னையின் புனித பாதங்களில் பக்தி நிறைந்த மலர் கொடியாய் நம்பிக்கையோடு சமர்ப்பிப்போமாக!

"லீலியைப் போல புஷ்பங்களை மலரச் செய்யுங்கள், மணத்தைக் கொடுங்கள். சங்கீதத்தைப் பாடுங்கள்; ஆண்டவரை அவருடைய செயல்களில் வணங்குங்கள்..." (சர்வப்பிர. 39:19).

**அர்ச். ஜெபமாலை மாதாவே**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது தங்களது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)

## (5) அர்ச். எட்மண்ட் காம்பியன் (தொடர்ச்சி)

எட்மண்ட் காம்பியன் கத்தோலிக்கராக மனந்திரும்பியதும் தாம்பெரிதும் நேசித்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறினார். அயர்லாந்துக்குச் சென்று அங்கே இரண்டு வருடம் தமது கத்தோலிக்க நண்பரது குடும்பத்தினரோடு வாழ்ந்தார். அந்த நாட்களில் உத்தம கத்தோலிக்க ஜீவியத்தில் திளைத்து புண்ணியத்தில் உயர்ந்தார். அக்குடும்பத்தின் இளைஞர்களுக்கு கல்வி கற்றுக்கொடுத்துவந்த எட்மண்ட், டப்ளின் நகரில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவும் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதோடு கத்தோலிக்க நாடான அயர்லாந்தின் வரலாறு ஒன்றையும் எழுதி அதற்குப் புகழ் சேர்த்தார்.



அர்ச். எட்மண்ட் காம்பியன் வேதசாட்சியமடையும் காட்சி

பின்னர் தமது அழைத்தல் குருவாவதே என்பதை உணர்ந்தவராக துவேக்குச் (Douay ) சென்று அங்கே குரு மடத்தில் சேர்ந்தார். “உப தியாக்கோன் பட்டம்” பெற்ற பின் உரோமைக்குச் சென்று அங்கே சேசு சபையில் சேர்ந்தார். பிராக் நகருக்கு நவசந்நியாச வாழ்வுக்காக அனுப்பப்பட்ட எட்மண்ட் காம்பியன் 5 ஆண்டுகளுக்குப் பின்னர் 1578 செப்டம்பர் மாதத்தில் குருப்பட்டம் பெற்றார்.

அந்த நேரத்தில் ஜெர்மன் நாட்டில் புராட்டஸ்டாண்டாரிடையே சேசு சபையினர் ஆற்றிய அரிய காரியங்களையும், அதனால் விளைந்த நன்மைகளையும் அறிந்த பாப்பரசர் 13-ம் கிரகோரியார் சேசு சபையினரை இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்புவதாக முடிவு செய்தார். அப்படி தேர்வு செய்யப் பட்டவர்களில் எட்மண்ட் காம்பியனும் ஒருவராக இருந்தார்.

இங்கிலாந்துக்கான பயணத்தை துவக்கும் முந்தின நாள் இரவில் அவர் தங்கியிருந்த அறையின் கதவில் **“எட்மண்ட் காம்பியன் வேதசாட்சி”** என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டு அனைவரும் திகைத்தனர். தேவ ஏவுதலால் ஒரு குருவானவர் அப்படி எழுதியிருந்த அந்த வாக்கு நம் புனிதரின் வாழ்வில் நிறைவேறியது என்பது குறிப்பிடத்தக்கது!

1580-ம் ஆண்டு உரோமையிலிருந்து ஜெனிவா நகர் வழியாக இங்கிலாந்து வந்த அவர்கள், திருச்சபையின் எதிரிகளால் அடையாளம் காணமுடியாத வகையில் மாறுவேடம் பூண்டு சென்றனர். அங்கே, இங்கிலாந்தில் கத்தோலிக்க விசுவாசம் நலிந்துபோய் அழிந்துகொண்டிருந்தது! கிறீஸ்தவர்கள் கலாபனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். தேச துரோகக் குற்றம் சாட்டப்பட்டு சிறைபிடிக்கப்பட்டார்கள். “குருக்களே இங்கிலாந்து நாட்டில் இல்லை!” என்ற நிலை ஏற்பட, தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்ற முடியாத அவலம் ஏற்பட்டது. சில குருக்கள் மாறுவேடம் பூண்டு விசுவாசிகளின் வீடுகளில் தங்கி, அரசாங்க வீரர்கள் தேடிவந்தபோது பிடிபடாமல் தப்பிக்க பதுங்கு குழிகளில் தங்கினர். இதற்காக ஒவ்வொரு கத். இல்லத்திலும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன. குருக்கள் அவற்றில் மறைந்து வாழ்ந்து குறிப்பிட்ட நாட்களில் அங்கே கூடும் விசுவாசிகளுக்கு திவ்விய பலிபூசை, பிரசங்கம் போன்றவற்றை நிகழ்த்தி ஞான வாழ்வில் ஊக்கப்படுத்தினார்கள். அவர்களை பிடிக்கவென்று ஒற்றர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் **“குரு வேட்டையாளர்கள்”** என்று அழைக்கப்பட்டனர்.

இந்த சூழ்நிலையில்தான் அர்ச். எட்மண்ட் காம்பியன் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார். அவர் வருவதற்கு முன்பாகவே தமது நோக்கத்தை குறிப்பிட்டு கத்தோலிக்க சத்தியங்களை ஆதரித்து ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் "எனது அருமை நாட்டு மக்களின் ஞான ஆபத்துக்களையும், தீமைகளையும் மற்றும் அவர்களது ஆங்கார அறியாமையையும் அகற்றி அவர்களைக் காப்பதுவே தமது நோக்கம்" என்று தெரிவித்திருந்தார். காம்பியனும் அவரது சக குருவானவரும் இங்கிலாந்துக்குள் ஊடுருவி விட்டனர் என்ற தகவல் எப்படியோ சுங்கத்துறையினருக்குத் தெரியவர, துறைமுகம் எங்கும் ஒற்றர்களின் செயல்பாடு அதிகரித்திருந்தது. ஆனாலும் அவர்களது கண்களுக்குத் தப்பி பல நகரங்களுக்கு இடம் பெயர்ந்து மக்களுக்கு விசுவாச சத்தியங்களைப் போதித்து, கத்தோலிக்க விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்தி வந்தனர். அநேகர் மனந்திரும்பினார்கள். இதைப்பற்றி சேசுசபை தலைவருக்கு காம்பியன் எழுதிய கடிதத்தில் "...நான் நாள்தோறும் அங்குமிங்கும் போய் பணியாற்றி வருகிறேன். அறுவடை உண்மையாகவே தாராளமாயிருக்கிறது. திருச்சபையின் எதிரிகள் கையில் அகப்பட வெகுநாள் பிடிக்காது. நான் என்னை மறைத்துக்கொள்ளப் பயன்படுத்தும் உடை எனக்கே சிரிப்பூட்டுகிறது. பெயரையும் அடிக்கடி மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது..." என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இங்கிலாந்தில் மறைவாக அப்போஸ்தல அலுவலில் ஈடுபட்டுவந்த எட்மண்ட் காம்பியன் புராட்டஸ்டாண்ட் பதிதத்தைத் தாக்கி, கண்டித்து **"பத்துக் காரணங்கள்"** என்ற அரிய நூலை லத்தீன் மொழியில் எழுதினார். அது, எதிரிகளால் பிடிபடும் கத்தோலிக்கர்கள் தங்கள் விசுவாசத்தைப்பற்றி விசாரிக்கும்போது கூற வேண்டிய பதில்கள் அடங்கிய தொகுப்பாக இருந்தது. சத்திய வேதத்தை ஆதரித்து ஆங்கிளிக்கன் - புராட்டஸ்டாண்ட் பதிதத்தை கண்டிப்பனவாகவும் இருந்ததால் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நூல் 1587 ஜுன் 27-ம் தேதியன்று ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஆலய இருக்கைகளில் 400 பிரதிகள் வைக்கப்பட்டன. அதோடு ஐரோப்பிய நாடுகளிலும்கூட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு 48 பதிப்புகளில் வெளியிடப்பட்டது. இது அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தவே, அந்த நூலை எழுதிய எட்மண்ட் காம்பியனை பிடிப்பதற்கு ஒற்றர்களையும், குரு வேட்டைக்காரர்களையும் முழுவீச்சுடன் இறக்கிவிட்டது.

நூல் வெளியிடப்பட்டதும் வேறு எங்காவது மறைவாக சிலகாலம் போய்விடுவது நலம் பயக்கும என்று எண்ணிய காம்பியனும் அவரது சகக்குருவானவரும் நார்ஃபக் (Norfolk) நகருக்குப் பயணமானார்கள். வழியில் Lyford Grange என்ற ஊர் வரவே அங்கே சிலநாட்கள் தங்க முடிவெடுத்தனர். ஏனெனில் அவ்வூர் செல்வந்தரான திரு.யாட் (Yate) என்பவர் தமது கத். விசுவாசத்திற்காக லண்டனில் சிறை தண்டனை அனுபவித்தவர். அவரது வயது முதிர்ந்த தாய் தன் வீட்டில் நிரந்தரமாக 2 குருக்களையும் சில கன்னியர்களையும் தங்கவைத்து பராமரித்து வந்தாள். எனவே அங்கே தங்கி அவரை பாராட்டி விசுவாசிகளை உற்சாகப்படுத்திவிட்டுச் செல்ல முடிவெடுத்தார். புகழ்பெற்ற எட்மண்ட் காம்பியன் சுவாமி மாறுவேடத்தில் இரகசியமாக வந்தாலும் அவரது வருகை சுற்றுவட்டாரத்திலுள்ள கத். விசுவாசிகளிடையே பரவியது. அரசின் ஒற்றர்களுக்கும் இச்செய்தி எட்டவே அக்குடும்பத்தின் முன்னாள் வேலையாளான ஜார்ஜ் எலியாட் என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டார்.

## காம்பியன் பட்ட வாதனை!

பிடிபட்ட சங். எட்மண்ட் காம்பியன் சுவாமி லண்டனுக்கு கொண்டுசெல்லப்பட்டு அதன் வீதிகளில் பகிரங்கமாக இழுத்துச் செல்லப்பட்டார். முன்னொரு காலத்தில் இதே வீதிகளில் சிறந்த கல்வியாளர், இங்கிலாந்தின் இரத்தினம் என்றெல்லாம் புகழப்பட்ட அவர் இன்று தாம் கொண்ட சத்திய விசுவாசத்திற்காக கொடூரமாக இழுத்துச் செல்லப்பட்டு லண்டன் டவர் சிறையில் ஒரு சிறு இருட்டு அறையில் அடைக்கப்பட்டார்.

மூன்று நாட்களுக்குப் பிறகு தேம்ஸ் நதிக்கரைக்கு அப்பால் உள்ள லெய்செஸ்டர் மாளிகைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அன்று ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்கு எலிசபெத் ராணி வருகை தந்தபோது தாம் நிகழ்த்திய வரவேற்புரையை பாராட்டி தமக்கு ஆதரவாளராக மாறிப்போன அமைச்சர் லெய்செஸ்டர் பிரபுவின் (Earl of Leicester) இல்லம் தான் அது! அங்கே தன் முன்னால் நிற்கும் நபரைக் கண்டு வியந்துபோன எட்மண்ட் காம்பியன் தன் கண்ணை தான் நம்பாது திகைத்தார். ஆம்! அவர் முன்பு நாட்டையாளும் எலிசபெத் அரசியே நின்றிருந்தாள். ஒரு காலத்தில் தம்மால் "இங்கிலாந்தின் இரத்தினம்" என்று அழைக்கப்பட்டவர் இன்று தனக்கு எதிராக, தமது வேதத்திற்காக கைதியாக நிற்பதைக் கண்டு முகம் சுளித்தாள் அரசி. ஆனாலும் மிகவும் நயமாக அவரைப் பாராட்டியவள், பிடிவாதத்தை விடுத்து அரசியான தன்னை திருச்சபையின் தலைவியாக ஏற்றுக்கொள்ளும்படியாகவும், அபத்த கத்தோலிக்க விசுவாசத்தை பகிரங்கமாக மறுத்துவிடும் படியாக கேட்டாள். அப்படி அவர் செய்தால், ஆங்கிலிக்கன் சபையில் மிக உயர்ந்த அந்தஸ்து அவருக்காகக் காத்திருக்கிறது என்ற ஆசை வார்த்தைகள் கூறினாள். ஆனால் அரசியின் எந்த வார்த்தைகளுக்கும் பணியாமல் தமது விசுவாசத்தில் உறுதியாக நின்ற காம்பியனைக் கண்டு வியந்தவளாக அவரைவிட்டு அகன்றாள்.

ஐந்து நாட்களிலும் அவர் தமது கொள்கையில் பிடிவாதமாக இருந்ததால் அவரை 3 தடவைகள் வாதைக் கருவியால் துன்புறுத்துமாறு உத்தரவிடப்பட்டது. அதன்படி இரும்பு சட்டத்தில் கை, கால்கள் கட்டப்பட்டு கொடூரமாக இழுத்துக் கொடுமைப்படுத்தப்பட்டார். கை கால்களின் மூட்டுகளும் எலும்புகளும் பிய்ந்து நெட்டுருகிப்போய் கொடூர வேதனையளித்தது. அத்தனையையும் தாங்கிக் கொண்ட எட்மண்ட் காம்பியன் தேவ உதவிக்காக மன்றாடினார். தமது அனைத்து வேதனைகளையும் இங்கிலாந்து தேசம் மீண்டும் சத்திய வேதத்திற்கு வர ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்.

இத்தகைய வாதை நடந்துகொண்டிருக்கும் போதே நான்கு தடவைகள் வேத தர்க்க விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டார். தான் இருந்த நிலையிலும் அவர்களுக்கு தக்கப் பதில் தந்து முறியடித்தார். தம்மைத் துன்புறுத்தியவர்களிடமும் வெகு சாந்தத்தோடு அவர் நடந்துகொண்ட முறையைக் கண்டு வியந்துபோன பிலிப்பு ஹோவர்ட் (Philip Howard) மற்றும் அரண்டல் பிரபு (Earl of Arundal) மனந்திரும்பினார்கள்.

மீண்டும் வாதைக் கருவியின் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட காம்பியன் சுவாமி மீது குற்றப்படுத்த

*ஒன்றும் கிடைக்காததால் அவர் இங்கிலாந்தில் புரட்சி ஒன்றை உண்டாக்கும் கருத்தோட நாட்டிற்குள் வந்ததாக கதைக் கட்டினார்கள். ஆனால் அதனை தமது வாதத்தால் தூளாக்கிய காம்பியன் "நாங்கள் எலிசபெத் அரசிக்கு விரோதமாக எக்குற்றமும் செய்ததில்லை. உங்களுக்கு குற்ற மாகத் தெரிவது நாங்கள் எங்கள் கத்தோலிக்க விசுவாசத் திற்கு பிரமாணிக்கமாயிருப்பது மட்டுமே!" என்று எடுத்துக் கூறினார்.*

*தமக்கு மரண தண்டனை விதிக்கப்படும் முன்பாக அங்கிருந்த நீதிபதிகளை நோக்கி, "எங்களை இப்போது கண்டனத்துக்கு உள்ளாக்கும் நீங்கள், உங்கள் முன்னோர் கள் அனைவரையுமே கண்டனத்துக்குள்ளாக்குகிறீர்கள். அந்த முன்னோர்களின் தகுதியற்ற வாரிசுகளாக இப்போ துள்ள உங்களால் நாங்கள் கண்டனத்துக்குள்ளாவது எங்களுக்கு மகிழ்ச்சியும், மகிமையுமேயாகும். சர்வேசுரன் எப்போதும் இருக்கிறார். உங்கள் வாரிசுகளும் இப்போது நீங்கள் செய்வதைப் பார்ப்பார்கள். உங்கள் மீது அவர்களும் சர்வேசுரனும் தரும் தீர்ப்பு ஒருநாளும் தவறாது உண்மை யாகவேயிருக்கும்" என்று கூறினார். காம்பியன் பிறரைப் போல் அல்லாமல் அரசியின் தனிப்பட்ட அரச அதிகாரிக ளால் விசாரிக்கப்பட்டு தேசத்துரோக குற்றம் சாட்டப் பட்டு மரண தீர்ப்பு வழங்கப்பட்டார். அப்போது அங்கே வந்த, தன்னைக் காட்டிக்கொடுத்த எலியட் மற்றும் ஹாப்டன் என்பவர்கள் புனிதரின் அவலநிலைக்கு தாங்கள் தான் காரணம் என்று ஒப்புக்கொண்டனர். அவர்களை மன்னித்து விட்டதாக புனிதர் அறிவித்தார்.*

*கொலையாளி தன் வேலையைச் செய்வதற்கு முன்பாக, எட்மண்ட் காம்பியன் சுற்றியிருந்த மக்களைப் பார்த்து, "உங்கள் அரசியும், என் அரசியுமான அம்மையாருக்காக வேண்டுகிறேன். நீடித்த ஆயுளும், எல்லா நலனும் அவர்களுக்கு உண்டாவதாக" என்று ஜெபித்தார். அவரும் அவரோடு தீர்ப்பிடப்பட்ட குருக்களும் வழக்கம்போல் காட்டுமிராண்டித்தனமாக கொலை செய்யப்பட்டார்கள். முதலில் தூக்கிலிடப்பட்டு, உடல் கீழே விழத்தாட்டப் பட்டு, வயிறு கிழிக்கப்பட்டு, உடல் துண்டுதுண்டாக பிரிக்கப்பட்டார்கள்.*

*அப்போது வெட்டப்பட்ட புனித எட்மண்ட் காம்பியனின் இரத்தத்துளி ஒன்று அங்கே வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த ஷென்றி வால்ப்போல் என்ற இளைஞன் மீது சிதறி விழுந்தது. அதன் பலனாய் அவரும் பின்னாளில் சேசு சபையில் சேர்ந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு அதே இடத்தில் வேதசாட்சிய வரம் பெற்றார்! (இவரது வரலாற்றை அடுத்த இதழில் காண்போம். ஆ.ர்)*

*வேதசாட்சியான எட்மண்ட் காம்பியனுக்கு 1970-ம் ஆண்டில் அர்ச்சியசிஷ்டப்பட்டம் வழங்கப்பட்டது!*

**அர்ச். எட்மண்ட் காம்பியனே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

(தொடரும்)

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## விசுவாச மந்திரம்

பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் இந்த மந்திரத்தை உண்டுபண்ணி, இதிலே பன்னிரண்டு பிரிவுகளாக வேத சத்தியங்களை நமக்கு படிப்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே மூன்று பிரதான பாகங்கள் உண்டு.

*(1)* **திரித்துவத்தின் பரம இரகசியம்:-** சர்வேசுரன் தேவ சுபாவத்திலே ஒருவராயிருந்தாலும், ஆள் வகையிலே மூவராயிருக்கிறார். அவர் துவக்கமின்றி, எப்பொழுதுமிருந்து, மற்ற வஸ்துக்களையெல்லாம் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கிக் காப்பாற்றி நடப்பித்துக்கொண்டு வருகிறார்.

*(2)* **மனுஷாவதாரத்தின் இரகசியமும், நமது இரட்சணியத்தின் இரகசியமும்:-** இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரன், பாவத்தினாலே கெட்டுப்போன மனுக்குலத்தை இரட்சிக்க, மனுஷ சுபாவத்தை எடுத்துப் பிறந்து, நமக்காகப் பாடுபட்டு, மரித்து, உயிர்த்து, மோட்சத்துக்கு எழுந்தருளினார்.

*(3)* **மனுஷனுடைய அர்ச்சிப்பு:-** பரலோகத்துக்கு எழுந்தருளுமுன், சேசுநாதர்சுவாமி மோட்ச வழியை நமக்குக் காண்பிக்கவும், பாவப்பொறுத்தல் முதலான தேவதிரவிய அநுமானங்களைக் கொடுக்கவும், வேத சத்தியங்களையெல்லாம் படிப்பிக்கவும், தவறக்கூடாத திருச்சபையை ஸ்தாபித்தார். அவர் உலகமுடிவில் சகல மனிதரையும் உயிர்ப்பித்த பிற்பாடு, அவரே நடுத்தீர்வையிட்டு, நமது பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடி ஒருக்காலும் முடியாத நரகமாவது மோட்சமாவது கட்டளையிடுவார்.


இந்த சத்தியங்களையெல்லாம் சர்வேசுரன் தாமே அறிவித்தபடியினாலே, நாம் ஒருபோதும் சந்தேகப்படாமல், இவைகளை முழுமனதோடே விசுவசிக்கவேண்டியது அவசியம்.

| மந்திரம் | கருத்து |
| --- | --- |
| 1. பரலோகத்தையும், பூலோகத்தையும் படைத்த | 1. வானத்தையும், பூமியையும், அவைகளிலடங்கிய சகலத்தையும், ஒன்றுமில்லாமையினின்று உண்டாக்கினவரும், |

**அர்த்தம்:-** படைக்கிறது = ஒன்றுமில்லாதிருக்கையில், யாதொரு பொருளும் உதவியுமின்றி, சித்தத்தினால் மாத்திரம் உண்டுபண்ணுகிறது.

(தொடரும்)

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை
## அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]


### முதல் பாகம்

#### இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)

#### ௬. நிருப வாசகம் (தொடர்ச்சி)

#### (அப்போஸ்தலர்களின் போதனை)

*முன்பெல்லாம், அதாவது 5-ம் நூற்றாண்டு வரையிலும் நிருபத்தை வாசிப்பது* Lector - *"வாசிப்போனின்" கடமையாக இருந்தது. அதற்குப் பிறகு அதனை ஆடம்பரமாக பாடலாகப் படிக்கும் பொறுப்பு உபதியாக்கோனுடையதாக மாற்றப்பட்டது. 14-ம் நூற்றாண்டிலிருந்து இதற்கென்று - நிருபம் வாசிக்கத் தகுதியாகும் பொருட்டு உபதியாக்கோன் பட்டம் வழங்கும் சடங்கில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. சான்றாக, கி.பி 250-ல் அர்ச். சிப்பிரியான் என்பவர் லெக்டர்கள் சுவிசேஷம்கூட வாசிக்க அனுமதிக்கப்படுவதை குறிப்பிட்டுள்ளார்.* (cf Epist. 38,39). *ஆனாலும் சுவிஷேத்தை தியாக்கோன் வாசிக்கும் வழக்கம் நிர்ணயிக்கப்பட்டு, 10-ம் நூற்றாண்டிற்குப் பிறகு அவரது தியாக்கோன் பட்டச் சடங்கில் இதற்காக ஜெபங்கள் படிப்படியாகச் சேர்க்கப்பட்டன.*



*பாரம்பரியமாக - தொன்மை காலங்களில் தேவாலயங்களில் சுவிசேஷம் வாசிப்பதற்கென்று அடுக்குப்படிகளைக் கொண்ட வாசகமேடை அமைக்கப்பட்டது. அது அம்போ* (Ambo) *என்றழைக்கப்பட்டது. சில ஆலயங்களில் இரண்டு அம்போ மேடைகள் அமைக்கப்பட்டால், ஒன்று சுவிசேஷம் வாசிக்கவும், மற்றொன்று நிருபம் வாசிக்கவென்று பயன்படுத்தப் பட்டது. ஒரே ஒரு அம்போ மேடை மட்டும் இருந்தால் சுவிசேஷம் வாசிக்கும் போது வாசிப்பவர் அதன் உயர்ந்த மேல்படிக்கட்டில் நின்று வாசிப்பதும், நிருப வாசகங்கள் 2-வது தாழ்ந்த படிக்கட்டிலிருந்து வாசிப்பதும் பழக்கமாக இருந்தது. உரோமையில் அர்ச். கிளமென்ட் பேராலயத்தில் 3 அம்போ மேடைகள் உள்ளன. சுவிசேஷம், நிருபம் மற்றும் நிருபத்தில் பழைய ஏற்பாட்டு நூல்களை வாசிக்க அவை தனித்தனியாக பயன்படுத்தப் பட்டு வருகிறது.*

*சுவிசேஷம், நிருபம் ஆகியவற்றை ஆடம்பரமாக வாசிக்க அல்லது பாடலாகப் படிக்க ஆட்கள் - வாசிப்பு - இடம் ஆகியவற்றை நிர்ணயிப்பதின் மூலம் அவற்றின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டு வந்தது.*

*ஆரம்ப காலங்களிலிருந்து* (Ch. Ordo. Rom 1.11-10) *நிருபத்தை வாசிக்கும்போது பாடற் குழுவினர் மற்றும் விசுவாசிகள் அமர்ந்திருந்தும், சுவிசேஷம் வாசிக்கப்படும்போது எழுந்து நிற்பதும் வழக்கமாக இருந்தது. உபதியாக்கோன் அம்போ பீடத்திலிருந்து மக்களைப் பார்த்து வாசிக்கவில்லையானாலும் (மத்திய காலம் வரை அவரே வாசிக்கும் பழக்கம் இருந்தது!). அவர் இடதுபுறமாகப் பீடத்தை நோக்கி திரும்பி நிற்கவேண்டும். நிருபம் வாசிக்கப்படும் முன்னும் பின்னும் பீடத்தின் மத்தியில் வந்து ஒற்றை முழங்காலிட வேண்டும். நிருபத்தை வாசிப்பவர், வாசிப்பதை நிறுத்திய பிறகு பூசை நிறைவேற்றும் குருவிடம் அவர் கிறீஸ்துவின் ஆளாக - பிரதிநிதியாக இருப்பதால் அவரிடம் ஆசீர் பெறவேண்டும். ஏனெனில், பழையச் சட்டத்தைக் குறித்துக் காட்டும் நிருபம் கிறீஸ்துவிடமாய் நிறைவேறிவிட்டது. அதனை அவர் அழித்து விட்டார் என்பதன் அடையாளமாக உள்ளது. இதுபோல தியாக்கோன் சுவிசேஷத்தை வாசிப்பதற்கு முன்பாக குருவானவரிடம் ஆசீர் வாங்கவேண்டும். இது ஏனெனில், சுவிசேஷம் கிறீஸ்துவிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டு*

வதற்கே இவ்வாறு ஆசீர் வழங்கப்படுகிறது. (Ch. Durand. op.cit IV. chap. 17)

பழைய புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் சர்வேசுரனை ஆசிரியராகவும், பரிசுத்த ஆவியின் தேவ ஏவுதலாலும் எழுதப்பட்டவையாதலால் அவை ஒரே தெய்வீக அந்தஸ்தையும், அதிகாரத்தையும் பெறுகின்றன. இருப்பினும் இவைகளில் சில முக்கியத்துவ வேறுபாடு களைக் கொண்டுள்ளன. அவை திவ்விய இஸ்பிரீத்துசாந்து வானவரின் ஏவுதலால் மனித கரங்களால் எழுதப்பட்டவை யாதலால் சற்று குறைந்த முக்கியத்துவ வேறுபாடுகள் வழங்கப்படுகின்றன. அதன்படி பழைய ஏற்பாட்டு நூல் களைவிட, புதிய ஏற்பாட்டு சுவிசேஷங்கள் அந்தஸ்தில் உயர்ந்தவை. அதிலும் புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு சுவிசேஷங்கள், அப்போஸ்தலர் நடபடிகள், நிருபங்கள் பிறகு கடைசியாக காட்சியாகம நூல் என்று வரிசைப் படுத்தப்பட்டிருப்பதை நாம் அறியலாம். தேவ வெளிப் படுத்துதல் தொடர்ந்த மெதுவான வளர்ச்சியைக் கொண்ட ஒன்றாதலால் பழைய ஏற்பாடு கிறீஸ்துவில் புதிய ஏற்பாட் டில் முழுமையடைகிறது.

சாதாரணமாக, தேவ வெளிப்படுத்துதல் தீர்க்க தரிசிகள், அப்போஸ்தலர்கள் வழியாக மட்டுமல்லாமல் தமது ஏகபேறான தேவ குமாரன் மூலமாகவும் சர்வேசுரன் நம்மோடு பேசுகிறார். தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர் களும் பரிசுத்த ஆவியானவரின் கரங்களாகத் திகழ்கிறார்கள். அவர்கள் வழியாகவே பரலோக உண்மைகளை அறிவிக் கிறார். அவர்கள் மீட்பைப்பற்றிய மனித அறிவிப்பாளர் களாக மட்டுமே திகழ்கின்றனர். ஆனால், சேசு கிறீஸ்து தெய்வீக ஆள், சத்தியமானவர். உலகின் உண்மையான ஒளி அவரே. அவரது அனைத்து வார்த்தைகளும், அலுவல்களும், புதுமைகள் அனைத்தும் தெய்வீகமானவை. அவை ஜீவியம் நிறைந்தவை. அவரது போதனைகள் முடிவில்லா உண்மை யானவை, அழகுள்ளவை. ஆகவே நான்கு சுவிசேஷங்கள் உந்நதமான இடத்தைப் பிடிக்கின்றன.

நிருபத்தில் பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசுகிறார். போதிக்கின்றார். கண்டித்து திருத்துகிறார். அவை அவரது மனித தூதர்கள் அல்லது ஊழியர்கள் மூலமாக எழுதப் பட்டவை. அவை மக்களுக்கு அறிவுரை கூறுவதாக இருப்பதால் நிருப வாசகங்கள் முதலில் வாசிக்கப்படு கின்றன. கிறீஸ்துவின் மீட்பின் போதனையைக் கேட்பதற் கான தயாரிப்பாகவே, நிருபங்கள் முதலில் வாசிக்கப்படு கின்றன. சுவிசேஷத்திற்கு துணையாக, அதனை நன்கு புரிந்துகொள்ள உதவியாக அனுசரணையாக, தயாரிப்பாக நிருபவாசகங்கள் முதலில் வாசிக்கப்படுகின்றன.

நிருப வாசகங்களும், சுவிசேஷ வாசகங்களும் பொது வாக ஒன்றுக்கொன்று அனுசரணையாக நித்திய உண்மை களைப் புரிந்துக்கொள்ளக்கூடியவையாக திவ்விய பலிபூசை யில் சேர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக: மகா பரிசுத்த தமதிரித்துவ திருநாள் பூசையில் அர்ச். சின்னப்பர் உரோ மையருக்கு சர்வேசுரனுடைய தெய்வீக இரகசியங்களை மகிமைப்படுத்துகிறார். (உரோ. 11:33-36). சுவிசேஷமோ சர் வேசுரனின் மூன்று ஆட்தன்மையின் ஆராதனைக்குரிய பரம இரகசியத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.(மத். 28:18-20).

அதிகமான நிருப வாசகங்கள் பழைய ஏற்பாட்டு நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. காரணங்கள்:

1. பழைய ஏற்பாடு கிறீஸ்துவுக்கும் அவரது தெய்வீக அரசாட்சிக்கும் சாட்சியமாகத் திகழ்கின்றன. பழைய ஏற்பாட்டில் காணப்படும் தீர்க்கதரிசனங்கள் மற்றும் ஆட்களின் உருவங்கள் புதிய ஏற்பாட்டு மறைபொருளுக்குச் சான்றாகவும், ஆதாரமாகவும் திகழ்கின்றன. உதாரணமாக தேவமாதாவின் மகிமைக்கான திவ்விய பலிபூசையின் நிருபங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்தே எடுக்கப்படுகின்றன. ஞானாகம புத்தகங்களிலிருந்து தேவதாயைக் குறித்துக் காட்டும் வாசகங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு வாசிக்கப் படுகின்றது.

2. பழைய ஏற்பாட்டு காலத்தில் மீட்பு இன்னும் தோன்றவில்லை. மீட்பின் ஒளி இன்னும் ஒளிரவில்லை. ஆகையால் இருளும், மரணத்தின் நிழலும் உலகை மூடி யிருந்தது. இரட்சண்யமான விடிவு காலத்தை ஆவலோடும், அங்கலாய்ப்போடும் அனைவரும் எதிர்பார்த்துக் காத் திருந்தனர். மீட்பரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து, தமது பாவங்களை நினைத்து வருந்தி மன்னிப்பு வேண்டி தவம் செய்து புலம்பும் நிலையிலேயே உலகம் இருந்தது. இதனால்தான் சாம்பல் புதனிலிருந்து பரிசுத்த வாரத்தின் செவ்வாய் வரையிலான பூசையில் பழைய ஏற்பாட்டு நூல்களே வாசிக்கப்படுகின்றன. அவை நம்மிடம் தவ மனஸ்தாப உணர்வை எழுப்பும் தன்மை கொண்டதாக இருக்கின்றன. நமது பாவங்களைச் சுட்டிக்காட்டி கண்டித்து திருத்துபவையாக இருக்கின்றன. அதோடு Ember - சதுர்காலம் - நோன்பு நாட்களின் புதன் மற்றும் சனிக்கிழமை பூசையின் நிருப வாசகங்கள் தவ உணர்வை அதிகம் உணர்த்துபவையாகத் திகழ்கின்றன. ஏனெனில் அப்போஸ்தலர்கள் காலத்திலிருந்தே இந்த சதுர்கால நாட்கள் ஜெபத்திற்கும், தபத்திற்கும், உபவாசத்திற்கும், தர்மமிடுவதற்குமான அழைப்பாக இருந்து வந்துள்ளது. இவற்றின் மூலமாக நமது ஆன்மாவை சுத்தப்படுத்தி சர்வேசுரனுக்கு ஏற்புடையவர்களாக ஆக்குவதுமட்டு மல்லாது, பருவகாலங்களுக்காகவும், அவை கொண்டுவரும் நன்மைகளுக்காக சர்வேசுரனுக்கு நன்றிசெலுத்தும் நாட்களாக இந்த சதுர்கால நாட்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நிருபம் வாசித்து முடித்ததும் பீடபரிசாரகர் (Acolyte) விசுவாசிகள் சார்பாக "Deo gratias - சர்வே சுரனுக்கு நன்றி" என்று கூறுவார். சாதாரண தனிப் பூசையில் குருவானவரே நிருபத்தை வாசிப்பார். வாசித்து முடிந்ததும் தமது வலது கரத்தால் பீடத்தைத் தொடுவார். இது பீடபரிசாரகனுக்கு நிருபம் முடிந்து விட்டது என்பதைச் சுட்டிக்காட்டவே இவ்வாறு செய்கிறார். அவரும் உடனே விசுவாசிகள் சார்பாக "Deo gratias - சர்வேசுரனுக்கு நன்றி" என்று கூறுகிறார். அவை நமது - விசுவாசிகளின் இதயத் தின் அடித்தளத்திலிருந்து எழும் நன்றி உணர்வாக இருக்கிறது. அதாவது பூசையில் நாம் பெற்றுக்கொண்ட தெய்வீக அறிவுரைகளுக்கு நன்றியறிதலாக இது ஒலிக் கின்றது.

(தொடரும்)

**திவ்விய பலிபூசையினால் பாவிகள் சர்வேசுரனோடு ஒப்பரவாகிறார்கள், நீதிமான் நீதியில் நிலைநிற்கிறான், பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, பாவப்பழக்கங்கள் வேரெடுக்கப்படுகின்றன, பேறுபலன்கள் அதிகரிக்கின்றன, புண்ணியங்கள் வளர்கின்றன, சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.** - அர்ச். லாரன்ஸ் யுஸ்தீனியன்.

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

**(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)**

## (14) மகா புத்தியுடைத்தான கன்னிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**தாய்** என்ற முறையில் மரியாயை இதுவரைப் போற்றிப் புகழ்ந்தோம். இனி பரிசுத்த கன்னிகை என்ற முறையில் அவர்களைப் புகழ்ந்து கொண்டாட திருச்சபை ஆசிக்கிறது. ஏவாளின் புதல்வியர்களில் எவரிடத்திலும் விளங்காத விவேகமும், புத்தியும் கன்னித்தாயிடத்தில் காணப்பட்டதைப்பற்றி அவர்களை வாழ்த்துதல் தகுமன்றோ!

'Prudentia' என்ற லத்தீன்வார்த்தை, வருவதை அறிந்து செயல் படுவது - புத்தியுடன் நடந்துகொள்வது என்ற பொருளைக் குறிக்கும். புத்தி அல்லது விவேகம் என்பது பிரதான நான்கு புண்ணியங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. ஒரு காரியம் நன்மையானதுதானா? புண்ணியமானதுதானா? அது சர்வேசுரனின் சித்தத்திற்கு ஏற்புடையதுதானா? என்பதை தெளிவாக அறிந்து, அதற்கேற்ப நடந்துகொள்வதே புத்தி அல்லது விவேகம் (Prudent) என்று கூறுகிறோம்.



தேவதாயை திருச்சபை மகா புத்தியுடைத்தான கன்னிகையே என்று அழைக்கிறது. அது எவ்வளவோ நியாயமானது! எப்படியெனில் தேவமாதா அமலோற்பவியாக இருப்பதால் அவர்களிடம் ஜென்ம பாவத்தின் ஒரு சிறு கறைகூட அணுகாமல் காப்பாற்றப்பட்டார்கள். அதனால் அப்பாவத்தால் மானிடர் களுக்கு வரும் அறியாமை (Ignorance) **என்ற குறைபாட்டி லிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அர்ச். தாமஸ் அக்வினாஸ்** "ஆதாம் ஏவாளின் பாவத்தால் நமது ஆத்துமத்தின் புத்தி என்ற தத்துவத்தில் அறியாமை என்ற காயம் ஏற்படுகிறது" என்று கூறுகிறார். அந்தக் காயம் மகா பரிசுத்த கன்னிமரியாயிடம் இல்லாததால் அவர்கள் பிறந்த அந்த கணத்திலிருந்து முழு புத்தியும், அறிவும், தெளிவும் கொண்டிருந்தார்கள். அதனால் சர்வேசுரனை தமது முழு சத்துவத்தோடு நேசித்தார்கள்.

தேவதாய் மகா புத்தியுடைத்தான கன்னிகையாக இருந் தார்கள் என்பதை அவளது இவ்வுலக ஜீவியத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒரு கன்னிகைக்கு முதன்மையாய் துலங்க வேண்டியது புத்தி என்றால் மிகையாகாது. ஏனெனில் விவேகமில்லையேல் கன்னிமைக்குப் பங்கம் நேரிடும். தேவதாய் சிறுவயதிலிருந்தே உலக மாய்கையிலிருந்து விலகி வாழ்ந்து, தன் கன்னிமையைத் தேவனுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்கள். அதனால்தான் மானிட ரூபத்தில் தோன்றிய கபிரியேல் அதிதூதரைக் கண்டு பயந்தார்கள். இரட்சகரின் மாதாவாக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பரம இரகசியத்தை வெளிப்படுத்தியதும் கலங்கினார். ஏன்? அவர்கள் அதிவிவேகம் உள்ளவர்களாதலால் உடனே தன் சம்மதத்தை தெரிவிக்கவில்லை. "என்ன ... நான்... ஓர் கன்னிகை... கற்பந்தரிப்பது?... அதெப்படியாகும்? "**நான் புருஷனை அறியாதவளாயிற்றே**" என்று சொல்லி விளக்கம் கேட்கிறார்கள். தேவ வல்லமையால் அவர்கள் தமது கன்னிமையை இழக்காமல் ஓர் குமாரனைப் பெறும் விதத்தை விளக்கிக் காட்டியதும் மரியாயின் சந்தேகம் தீர்ந்தது. உடனே சர்வேசுரனுடைய சித்தத்திற்கு பணிந்தார்கள். இதுதான் ஒரு சிறந்த விவேகியினுடைய செயல். தேவதாய் பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட புத்தியுள்ள கன்னிகையல்லவா?

தங்களது பெருமையை, தான் அறிந்த இரகசியத்தை வெளியே பறைசாற்றுவது விசேஷமாகப் பெண்களின் வழக்கம். பரி. கன்னிமரியாயிக்குக் கிடைத்த பெருமை, மகிமை உலக பெண்களில் எவருக்கும் கிடைக்காத ஒன்று. அவர்கள் அறிந்திருந்தது மேலான பரம இரகசியம்! எனினும் அர்ச். சூசையப்பரிடம் முதலாய் அவைகளை வெளியிடாமல் தேவ பராமரிப்பில் முழு நம்பிக்கைக் கொண்டு மௌனமாயிருந்தார்கள். இதுவே சிறந்த புத்தியுள்ள காரியம். மேலும் தன் குழந்தையைப் புகழ்ந்து பிறர் ஒன்று சொல்ல, அதைத் தொடர்ந்து பலவாறு சொல்லிப் பெருமை கொள்வது தாய்மார் இயல்பு. கன்னித்தாயோ தன் மகன் சேசுவை புகழ்ந்து பிறர் பேசும்பொழுது மனதினுள் சர்வேசுரனை துதித்தார்கள். சேசுவைப்பற்றிய உண்மைகளை வெளியிடாது அமைதியுடன் தேவ சித்தத்திற்குக் காத்திருந்தார்கள். இதுதான் புத்தி; இதுதான் விவேகம் என்னும் புண்ணியம்! இப்படி எவ்வளவோ கூறிக்கொண்டே போகலாம்! தேவதாய் மகா புத்தியுடைத்தானவர்களாய் (விவேகமுடையவர்களாய்) திகழ்ந்து நம் அனைவருக்கும், குறிப்பாக கன்னியர்களுக்கு ஓர் சிறந்த மாதிரிகையாக விளங்கு கிறார்கள். எனவே அவர்களிடம் "புத்தி" என்ற புண்ணியத்தை பெற்றுத் தரும்படிக்கேட்டு "**மகா புத்தியுடைத்தான கன்னிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**" என்று பிரார்த்திப்போமாக!

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் "The Catholic Family Hand Bood" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

## 1. மகிழ்ச்சியான குடும்பம் (தொடர்ச்சி)

### கத்தோலிக்கக் குடும்பத்தின் உயரிய நோக்கம்!

பெற்றோர்களே, நீங்கள் குடும்பத்தில் சர்வேசுரனால் அழைக்கப்பட்ட பரிசுத்த அழைத்தலை மேற்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில்கொள்வீர்களானால், உங்களது இல்லற வாழ்வில் பெரிய வெற்றியை அடைவீர்கள். ஒரு குருவானவரைப் போலவே, நீங்களும் கிறீஸ்துவின் பெயரால் உங்கள் குழந்தைகளுக்கு கல்வி புகட்டி, வழிநடத்தி, அவர்களை அர்ச்சிக்க அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். இதனால்தான் வந். கர்தினால் பிரான்சிஸ் ஸ்பெல்மன் "சர்வேசுரன் அன்று பெத்லேகமில் திருக்குடும்பத்தை எப்படி நோக்கினாரோ, அப்படியே இன்றும் ஒவ்வொரு குடும்பத்தையும் அழியக்கூடிய சரீரத்தினுடைய துவக்கமாகவும், அழியாத ஆத்துமத்தின் பிறப்பிடமாகவும் காண்கிறார். மனித பிறப்பை பரலோக, பூலோகத்திற்கான சின்ன பிரஜைகளின் பிறப்பிடமாகவும் பார்க்கிறார்" என்று குடும்பத்தின் மேன்மையைப்பற்றி கூறுகிறார். ஆகையால் பெற்றோர்களாகிய உங்களது பணி ஒரு புனிதமான, ஞான அலுவலாக இருக்கிறது. நீங்கள் உங்கள் பிள்ளைகளை மருத்துவர்களாகவோ, வழக்குரைஞர்களாகவோ, விஞ்ஞானிகளாகவோ உருவாக்கலாம். ஆனால் உங்கள் பிள்ளைகள் மோட்ச இராச்சியத்தை அடையாமலோ அல்லது அதற்குத் தேவையான வாய்ப்பு வழிமுறைகள் அவர்களுக்கு வழங்காமல் போயிருந்தால் நீங்கள் வெற்றி பெறவில்லை என்றுதான் கொள்ளவேண்டும். பிள்ளைகள் நித்திய வாழ்வை அடைந்து கொள்ளச் செய்வதுதான் உங்கள் பிரதான நோக்கம் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். இந்த கண்ணோட்டத்தில் உங்கள் குடும்பத்தை நோக்குவீர்களா னால் உங்கள் அழைத்தலின் அலுவலை முழுமையாக செய்ய வேண்டியதின் அவசியத்தை நன்கு உணர்ந்து கொள்வீர்கள்.



இந்த நவீனகால சமுதாயச் சூழ்நிலை குடும்ப வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, முந்தைய தலைமுறையினர் பெருமிதத்தோடு வாழ்ந்து உந்நத தலைவர்களை, கிறீஸ்தவர்களை உருவாக்கிய கத்தோலிக்கக் குடும்ப ஜீவியம் இன்று இல்லாமல் போய்விட்டது. இன்றைய நவீன தலைமுறையினர் தங்களது பெற்றோர்களின் வாழ்க்கை முறையை புறக்கணிக்கத் துவங்கிவிட்டனர். எப்படியெனில் அவர்கள் தங்களுக்கு அநேக உடன்பிறந்தவர்கள், சகோதர சகோதரிகள் இருப்பதை புகழ்கின்றனர். தங்களது பெரிய குடும்பத்தை பராமரிக்கும் தங்களின் தாய் தந்தையரின் சுய பரித்தியாகத்தை மெச்சுகிறார்கள். ஆனால் அவர்களைப் போல பெரிய குடும்பத்தை தாங்களும் கொண்டிருக்கவேண்டும் என்பதை கடினமானதாக உணர்ந்து எதிர்க்கிறார்கள். அதுபோன்று சில பெற்றோர்களும்கூட, தங்கள் பிள்ளைகள் கடின உழைப்பைக் கற்றுக்கொள்ளவேண்டும், பிறர்சிநேகத்தோடு உதவி செய்பவர்களாக இருக்கவேண்டும், சீரான அறிவும் நன்மை தீமைகளை பகுத்தறியும் திறனும், விசுவாசமும் கொண்டவர்களாகத் திகழ வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், இவைகளை அவர்களுக்கு வழங்குவதற்குத் தேவைப்படும் அனைத்தையும் செய்வதற்குத் தயங்குகிறார்கள். அல்லது செய்யவேண்டுமென்ற கண்ணோட்டத்தை ஏற்றுக்கொள்ளாதிருக்கிறார்கள். அதோடுகூட, சில தம்பதியினர் கிறீஸ்தவ திருமணத்தின் மேன்மையான கருத்திலிருந்து எவ்வளவு தூரம் அகன்று சென்றுவிட்டார்களென்றால், அவர்கள் கிறீஸ்தவப் பெற்றோர்கள் என்று அழைக்கப்படுவதற்கே அருகதையற்றவர்கள் ஆகிவிட்டார்கள்!

இன்று குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டு, தனிமனிதன் உயர்த்தப்படுகிறான். அவசரப்பட்டு மதியிழந்தவர்களாய் திருமணம் செய்துகொண்டுவிட்டு, பிறகு தங்களது சுய விருப்பு வெறுப்புக்கேற்ப அதைவிட்டு போய்விடுகிறார்கள். சிலர் வேண்டுமென்றே தங்களது வாரிசுகளின் (குழந்தைப்பேறு) எண்ணிக்கையை குறைக்கிறார்கள். இத்தகையோரது 'கருத்தடை மனப்பான்மை' இவர்களது சேர்ந்து வாழும் வாழ்க்கையை வெறும் நட்பாகவோ அல்லது தங்களது இச்சையை திருப்திப்படுத்தும் வழியாக மட்டுமே கருத ஊக்குவிக்கிறது. அநேக தடவைகள் 'சிறிய' - 'அளவான' ஆனால் செழிப்பான குடும்பங்கள் வெறும் சுயநலத்தை மட்டுமே கொண்டதாக இருக்கிறது. இச்சுயநலம் குடும்ப சமாதானத்தை முற்றிலும் அழித்து விடாவிட்டாலும், அதைக் கெடுத்து சஞ்சலத்தை ஏற்படுத்துவதாகத்தான் இருக்கிறது. குடும்பங்களின் இத்தகைய கருத்தடை மனப்பான்மை இளம் உள்ளங்களின் மனசாட்சியை மிகவும் பாதிக்கிறது.

இன்று அநேக நவீனகால மனைவிமார்கள் தங்கள் தாய்மையின் முதன்மையான நோக்கம் என்ன என்பதையும், நல்ல கிறீஸ்தவ இல்லங்களை உருவாக்குதல் மிக உன்னதமான ஒரு அலுவல் என்பதையும் மறந்து விட்டார்கள் அல்லது அறியாமல் இருக்கிறார்கள். அத்தகையோர் தங்கள் கணவன்மார்களுடைய அல்லத குடும்பத்தாரினுடைய பரித்தியாக வாழ்வை - உழைப்பை அலட்சியம் செய்து தங்களை பிரித்துக்கொண்டு விடுகிறார்கள். அதே போன்று கணவர்களும் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டி, வழிநடத்தி, அவர்களை அர்ச்சிக்கும் தங்களது உயரிய அழைத்தலிலிருந்து தங்களை விடுவித்து

கொண்டு விடுகிறார்கள். இதன் விளைவாக இத்தகைய குடும்பங்கள் பெரும் குழப்பத்திற்குள்ளாகின்றன. இப்படியாக திருமண பந்தமானது ஞான ஒழுக்கமற்ற ஒன்றாக மாறிப் போய்விடுகிறது. அது வெறும் உறுதியற்ற சுய விருப்பு வெறுப்புக்கேற்ற சமூக சடங்காக மாறி வருகின்றது.

இச்சீர்கேடுகளுக்கெல்லாம் காரணம், குடும்பங்களில் ஞான சம்பந்தமான நோக்கங்கள் மறக்கப்பட்டு விட்டதே! அதனால் குடும்பங்கள் மதச்சார்பற்ற கலாச்சாரத்தால் பீடிக்கப்பட்டு தனிமனிதனின் சிற்றின்ப மகிழ்ச்சி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு அவைகளை நிறைவேற்றுவதிலேயே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. அதோடு வேத சமய பற்றை மறுத்தல், கடவுளற்ற அறிவு வாதத்திற்கே முன்னுரிமையளித்தல் என்பது பொது ஸ்தாபனங்களில் குறிப்பாக, பள்ளிக்கூடங்களில் செயல்படுத்தப்படும் ஒன்றாகி வருகிறது. அதோடு பிள்ளைகள், தங்கள் பெற்றோரின் அதிகாரத்தையும், உரிமைகளையும் மறுத்தல் போன்ற அடாதக் குணங்களும் இந்த மதச்சார்பற்ற தன்மையுடன் இணைந்து குடும்பத்தைப் பாதிக்கிறது.

விரிந்து பரவி வரும் இத்தகைய தீமைகளுக்கு மருந்து - தீர்வுதான் என்ன? நமது கத். திருச்சபை இவைகளைத் திருத்தி, குடும்பங்களை நெறிப்படுத்த 2000 ஆண்டுகளாக எவைகளை போதித்து வருகின்றதோ, அவற்றையே ஒவ்வொரு குடும்பமும் மேல்வரிச்சட்டமாகக் கொள்ளவேண்டும். அவை:

1. கிறீஸ்தவ மெய்விவாகத்தின் கௌரவத்தை அங்கீகரிப்பது,

2. கிறீஸ்துவில், கிறீஸ்துவுக்காகவே குடும்ப வாழ்வை வாழ்வதன் தீர்மானத்தில் உறுதியாயிருத்தல்,

3. குடும்ப வாழ்வின் புண்ணியத்தை, குடும்ப சமாதானத்தை அழிக்கும் உலக தன்மையை எதிர்த்து நிற்பதில் உறுதி காட்டுவது மற்றும்

4. நல்லொழுக்கத்திற்கு எதிரான தீமைகள் குடும்பத்தைத் தாக்காமல் பாதுகாப்பதில் உறுதி.

இந்த தமது போதனைகளை கத்தோலிக்கக் குடும்பங்கள் தங்களது நோக்கங்களாகக் கொண்டிருத்தலையே திருச்சபை ஆசிக்கிறது. இவற்றில் உங்கள் குடும்பம் ஊன்றியிருந்தால், புறத்தே உங்கள் இல்லங்களுக்கு வெளியே எத்தகைய தீமைகள் சூழ்ந்திருந்தாலும் உங்கள் குடும்பம் சர்வேசுரனின் நிறைவான ஆசீர்பெற்ற உன்னத கிறீஸ்தவக் குடும்பமாகத் திகழும்.

(தொடரும்)

# கேள்வி – பதில் !

(நேயர்களே! இவ்விதழிலிருந்து 'கேள்வி–பதில்' என்ற புதிய பகுதியைத் துவக்கியிருக்கிறோம். இன்று வேதசத்தியங்களும், ஞானோபதேசமும் சரிவர போதிக்கப்படாததால் கத். மக்கள் ஏறக்குறைய தங்களது கத். விசுவாசத்தை இழந்து வருகின்றனர். அவர்கள் கத். போதனைகளையும், உண்மையான வேத சத்தியங்களையும் அறிந்துகொள்ளவும் அவற்றின் மீதான தங்களது சந்தேகங்களை போக்கி உறுதியடையவும் இப்பகுதி உதவும். கத். விசுவாசிகளிடமிருந்து கேள்விகள் வரவேற்கப் படுகின்றன. தனிப்பட்ட முறையிலான விமர்சனங்களைத் தவிர்க்கவும் – ஆ.ர்.)

✸ **தவறா வரம் என்றால் என்ன? தவறா வரத்துடன் போதித்த ஒன்றை மற்றொரு பாப்பரசர் மாற்ற அதிகாரம் உண்டா?**

**(I)** தவறாவரம், அதாவது தவற்றில் விழுந்துவிட முடியாத நிலை கத். திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஓர் கொடையாகும். தவறாவரத்தை இரு வகையாகப் பிரிக்கலாம்.

***முதல் வகை:*** திருச்சபையின் போதக அதிகாரத்தை கொண்டிருப்பவர்கள் கொண்டிருக்கும் தவறாவரம் (Infallibilitas in docendo).

***இரண்டாம் வகை:*** விசுவாசிகள் இப்போதனையை ஏற்றுக்கொள்வதால் - விசுவசிப்பதில் கொண்டிருக்கும் தவறாவரம் (Infallibilitas in credendo).

ஏற்கனவே நமதாண்டவர் சேசு கிறீஸ்துநாதரும், அப்போஸ்தலர்களும் போதித்திருக்கும் யாதொரு வேதசத்தியத்திற்கோ (Faith) அல்லது நல்லொழுக்கத்துக்கோ அடுத்த யாதொரு விஷயத்தை அப்போஸ்தலிக்க ஸ்தானத்திற்குரிய மேலான அதிகாரத்தோடு (Ex cathedra) சேசுநாதருடைய பிரதிநிதியாக (Vicar of Christ) உலகத்திலுள்ள சகல கிறீஸ்தவர்களுக்கும் விளக்கிக் காட்டுவதில் பாப்பரசர் தவறாவரத்தைக் கொண்டிருக்கிறார். (ஞா.உ.கோ. I, P198 எண் 9).

*பாப்பரசர் எப்போது தமது தவறாவரத்தைப் பயன்படுத்துவார்?*

*1. பரிசுத்த பாப்பரசர், அப்போஸ்தலிக்க ஸ்தானத்திற்குரிய தமது மேலான அதிகாரத்தோடு சகல கிறீஸ்தவர்களுடைய ஞான மேய்ப்பரும், போதகருமான முறையில் ஓர் விஷயத்தைப் படிப்பிக்கும்போதும்,*

*2. ஓர் விசுவாசத்தையாவது அல்லது நல்லொழுக்கத்தையாவது சேர்ந்த ஒரு சத்தியத்தைப் போதிக்கும்போதும்,*

*3. அவர் போதிப்பதை, அகில திருச்சபை முழுவதும் கைக்கொள்ளும்படியாகக் கட்டளையிடும்போதும் தமக்குரிய தவறாவரத்தைப் பயன்படுத்துகிறார்.*

**(II)** தவறாவரத்துடன் போதித்த ஒன்றை மற்றொரு பாப்பானவர் மாற்ற அதிகாரம் இல்லை.

*திருச்சபை கொண்டிருக்கும் தவறாவரம் முதலாம் வத். சங்கத்தில் (1866-69) விசுவாச சத்தியமாக அறிவிக்கப்பட்டது.* (D2 1839).

# செய்திகள்

## ★ கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல் நீடிப்பு !

பெங்களூர் அதிமேற்றிராசனத்திலுள்ள மங்களூரிலுள்ள அர்ச். அந்தோனியார் ஆலயம் வேத விரோதிகளால் அக்டோபர் மாதம் 13–ம் தேதி நள்ளிரவில் தீயிடப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. இதற்கு மின்கசிவு என்ற பொய்க் காரணத்தைக் கூறி காவல்துறையினர் நிலைமையை சமாளிக்க முயற்சித்தார்கள். ஆனால் மேற்றிராணியார் மோராஸ் ஆண்டகை இது திட்டமிட்டு செய்யப்பட்ட செயல் என்று கண்டனம் தெரிவித்தார். கிறிஸ்தவ மதத்திற்கு எதிராக செயல்படும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி ஆளும் மாநிலங்களில் கட்டுக்கடங்காமல் இச்செயல்கள் நடந்து வருகின்றன. இவர்கள் சத்தியவேதத்தை அறிந்து மெய்யான தேவனிடம் வந்துசேர அவர்களுக்காக மன்றாடுவோம்!

.

## ★ தம்பதியினருக்கு முத்திப்பேறு பட்டம் !



அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் பெற்றோர்களாகிய லூயிஸ் மார்டின் – மரி சேலி கேரின் தம்பதியினருக்கு கடந்த அக்டோபர் மாதம் 19–ம் தேதி லிஸ்ஸியே நகரிலுள்ள குழந்தை தெரசம்மாளின் பசிலிக்காவில் பாப்பானவரின் சார்பில் வந். கர்தினால் ஜோஸே சரைவா மார்ட்டின் ஆண்டகையால் முத்திப்பேறு பட்டம் வழங்கப்பட்டது. 1858–ம் ஆண்டு திருமணம் செய்துகொண்ட மரி சேலி கேரினும், லூயிஸ் மார்டினும் 9 குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். இதில் 4 பேர் குழந்தைப் பருவத்திலேயே மரித்தார்கள். மற்ற 5 குழந்தைகளும் தேவ அழைத்தலை ஏற்று கன்னியர்களானார்கள். புனிதையின் தாய் மரி சேலி கேரின் 1887–ல் தனது 46–ம் வயதில் புற்று நோயால் பீடிக்கப்

### தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை :**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை :**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறிஸ்துராஜபுரம் :**
கிறிஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில் :**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி :**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3-வது மெயின் ரோடு
ஸ்ரீனிவாசா நகர், திருச்சி - 620 017.
தொலைபேசி எண்: 0431 -

**சென்னை :**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 9941353483.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை :**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.


Society of St. Pius X
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.com